1981 ஏப்ரல் 29]

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார அடிப்படையிலே மிகவும் பிற்பட்ட கிழக்கு ராமநாதபுரம் மாவட்டத்திலே கடற்கரைப் பகுதியிலே Marine Industries- Fisheries சம்பந்தமாக தொழில் பள்ளி ஒன்றை அமைப்பதற்கு தனியார்கள் யாராவது முன் வந்தால் அரசு அதற்கு அனுமதி தருமா ?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுபோன்ற கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைப்பார்களேயானால் அந்தப் பகுதி களில் இருக்கின்ற நிலைமைகளை வைத்து பரிசீலித்து முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை, நீலகிரி மாவட்டங்களில் தொழிற்கல்வி ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அரக்கோணத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்று நிதிநிலை அறிக்கையிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர் களே அறிவித்திருக்கிறார்கள். அது எப்போது துவக்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கான சுகாதாரத் திட்டம்.

*வினா எண் 933—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்பு மிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களின் சுகாதாரத்தை பேணும் விரிவான திட்டம் ஏதேனும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் அவர்களுக்கு ஏனைய பல சலுகைகளை அளிக்கவும் இந்த அரசு விரைவில் ஒரு சட்ட வடிவினை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த

இருக்கிறது. இச்சட்ட முன் வடிவில் நெசவாளர்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்கான வழிமுறைகளான சுற்றுப்புறத் தூய்மை, காற்றோட்ட வசதி, போதிய வெளிச்சம், இடவசதி, குடிநீர், கைகழுவுவதற்கான வசதிகள், குழந்தைகள் காப்பகம் போன்றவற்றிற்கான விதிமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி நெசவாளர்களுடைய சுகாதாரத்தைப் பேணுகின்ற விரிவான திட்டத்தோடு அவர்களை நல்லமுறையில் பாதுகாப்பதற்கும் சட்டம் கொண்டுவரப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அதற்குரிய சட்டம் கொண்டு வரப்படுமா? அப்படியானால் எந்தத் தேதியில் கொண்டுவந்து அறிமுகம் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படுமா என்று வேண்டுமானால் கேள்வி கேட்கலாம், ஆனால் எந்தத் தேதி என்ற விவரங்களை எல்லாம் கேட்டால் அதற்குரிய விவரம் அமைச்சரிடத்திலே இருக்காது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் கைத்தறி நெசவாளர்களின் சுகாதாரத்தைப் பேணுகின்ற திட்டத்தை என்னென்ன முறைகளிலே செயல்படுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து விவாதிக்கின்றபோது மிகவும் விரிவாக விவாதிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாயமங்களம் குடிநீர் திட்டம்.

* வினா எண் 934.—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி தாலுகா தாயமங்களம் குடிநீர் திட்டம் நான்கு ஆண்டுகள் ஆகியும் இன்னும் முடியாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) எப்பொழுது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தாயமங்களம் கிராமத்தை தலைமைப் பணியிடமாகக் கொண்டு, இளையான்குடி, காளையார் கோயில் மற்றும் போகலூர் ஆகிய ஒன்றியங்களைச் சார்ந்த 67 சிற்றூர்களுக்கான